செ.வெ.எண்: 81 நாள்:10.02.2018

# திருநெல்வேலி மாவட்டம் தென்காசி அரசு பொது மருத்துவமணையில் 20 இலட்சம் மதிப்பில் காசநோயை கண்டறியும் ஜீன் எக்ஸ்பர்ட் கருவியை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம். ராஜலெட்சுமி அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

---

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி அரசு பொது மருத்துவமணையில் 20 இலட்சம் மதிப்பில் காசநோயை கண்டறியும் ஜீன் எக்ஸ்பர்ட் கருவியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம். ராஜலெட்சுமி அவர்கள் இன்று (10.02.2018) தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் 22 காசநோய் கண்டறியும் அலகுகள் உள்ளன. காசநோய் கண்டறிய பட்டவுடன் உடனடியாக மருத்துவமனைக்கு சென்று முறையான சிகிச்சை பெற்றால். ஒராண்டுக்குள் முழுமையாக குணமடைந்துவிடலாம் மத்திய மாநில அரசின் பல்வேறு காசநோய் தடுப்பு திட்டங்களால் தேசிய அளவில் காசநோய் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு 2000 நபர்களுக்கு காசநோய் கண்டறியபட்டு முறையாக சிகிச்சை அளிக்கபட்டு குனமடைந்துள்ளனர். தென்காசி அரசு பொது மருத்துவமணை வளாகத்தில் ரூ.13 கோடி செலவில் அரசு செவிலியர் கல்லூரிக்காண பணிகள் விரைவில் தொடங்கபடவுள்ளது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமணைக்கு அடுத்த படியாக தென்காசி அரசு மருத்துவமணையில் காசநோய் கண்டறியும் ஜீன் எக்ஸ்பர்ட் கருவி நிறுவபட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் காசநோய் கண்டறியும் இயந்திரங்கள் தேவையான இடங்களில் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளபடும். காசநோய் கண்டறியும் இயந்திரத்தின் மதிப்பு சுமார் .20 லட்சம் ஆகும் .சாதாரண காசநோயை (TB) ஆரம்ப நிலையில் கண்டுபிடிப்பது மட்டுமில்லாமல் ஒரே சோதனையில் வீரியமிக்க காசநோயையும் (MDR-TB)ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து விடலாம். இந்த பரிசோதனைக்கு தனியார் ஆய்வங்களில் சுமார் ரூ.4000/ வரை செலவாகும். இந்த பரிசோதனை சேவையை அரசு மருத்துவமணைகள் மட்டுமில்லாமல் தனியார் மருத்துவர்களும் அவர்களுடைய நோயாளிகளுக்கு கட்டனமின்றி பயன்படுத்திக்கொள்ளலாம் என மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம். ராஜலெட்சுமி அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.செல்வ மோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்,வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.மனோகரன் அவர்கள் இணை இயக்குனர் நல பணிகள் மரு.இளங்கோவன் துணை இயக்குனர் (காசநோய்) மரு.சுபைர் ஹஸன் முகமது கான் உட்பட முக்கிய பிரமுகர்கள் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி